<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>

<u>O.S.No.71/2021</u>

2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் படி திரு.புஷ்பராஜ் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தன் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | விஜயராகவன் | கிராமம் | : | |
| வயது | : | | வட்டம் | : | காஞ்சிபுரம் |

**<u>வா.சா.1 முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது.

1. கடந்த 06.06.2016 தேதியிட்ட ராமு பெயரில் பதிவு செய்துள்ள அக்கு விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அந்த அக்கு விடுதலை பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** கடந்த 20.09.2018 தேதியிட்ட ராமு வகையரா எனக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா .சா.ஆ.** 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. கடந்த 15.10.2018 தேதியிட்ட என் பெயரில் தாக்கலாகி உள்ள மனைவரி பட்டா எண்.1070 ற்கான அசல் தாக்கல் செய்கிறேன். அந்த மனைவரி பட்டா எள்.1070 அசல் **வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.R.Rajeswari)
Principal District Munsif,
Kancheepuram.